பொது நிருவாகச் சுற்றறிக்கை : 03/2020

எனது இலக்கம்:Pns/P4/W&OP/CONT-FEE/SUB-I
அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.12.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடுதல் தொடர்பான விபரங்களை தனிப்பட்ட கோவையில் சேர்த்தல்</u>**

1898 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம் மற்றும் 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தபுதாரர்கள் ஓய்வூதியச் சட்டம் என்பவற்றுக்கு இணங்க ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தரும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்வது கட்டாயமானதாகும். அதற்கிணங்க ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தனக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்தும் அநாதைகள் விதவைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அறவிடப்படுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். தற்போது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பங்களிப்புப் பணம் செலுத்துவதை உரிய காலப் பகுதியில் மேற்கொள்ள முடியாமைக்கு, அவர்களின் சேவைக் காலத்தினுள் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடப்பட்டதற்கான தகவல்கள் தனிப்பட்ட கோவையில் சேர்க்கப்படாமை ஒரு பிரதான காரணம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

02. முன்னைய வருடங்களுக்கான விதவைகள், அநாதைகள் பங்களிப்பு பணம் தொடர்பான விபரங்களைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டு வருட சலுகைக் காலம் வழங்கப்படும்.

03. இரண்டு வருட சலுகைக் காலத்தினுள் ஓய்வுபெறும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் தொடர்ச்சியாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்படுமாயின், தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்துள்ளதாக அவதானிக்கப்படுமாயின், ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அத்தகவல்களை அனுப்பினால் போதுமானதாகும்.

04. தாமதமின்றி ஓய்வுபெறும் உத்தியோகத்தர்களின் பயன்களை துரிதமாக வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணத்தை அறவிடுவது தொடர்பிலும் அறிக்கையிடல் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளை எடுப்பது உரிய அதிகாரிகளின் பொறுப்பாகும்.

(அ) உத்தியோகத்தரை ஓய்வுபெறச் செய்வதற்கு முன்னர் அவருடைய தனிப்பட்ட கோவையைச் சோதனையிட்டு கோவையிலுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்தலும் அரசுக்கு அறவிடப்பட வேண்டியவைகளை உறுதிப்படுத்துதலும்.

(ஆ) விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் முதல் நியமனத் திகதியிலிருந்து அவர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் மூலம் அவருக்கான விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்பு தொகை உரிய முறையில் அறவிடப்பட்டுள்ளதற்கான தகவல்களைப் பெற்று தனிப்பட்ட கோவையில் சேர்த்தல்.

(இ) உத்தியோகத்தர்களின் ஒவ்வொரு இடமாற்றத்தின் போதும் தங்களது நிறுவனதினுள் அவருடைய சம்பளத்திலிருந்து விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பண அறவீடுகள் தொடர்பான அறிக்கைளை இணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு இணங்கப் பூர்த்தி செய்து புதிய சேவை நிலையத்திற்கு தனிப்பட்ட கோவையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) இரண்டாம் நிலை அடிப்படையிலான விடுவிப்புக்களின் போது ஓய்வூதிய உரிமையைப் பாதுகாப்பதற்காகச் செலுத்த வேண்டிய வேண்டிய 25% விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணத்தை 6% அல்லது 7% அறவீடு தொடர்பான அறிக்கைகளை தனிப்பட்ட கோவையில் சேர்த்தல்.

05. தற்போதைய சேவை நிலையத்திற்கு வருவதற்கு முன்னர் பணியாற்றிய சேவை நிலையங்களின் ஊடாக அறவிடப்பட்ட விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை பற்றிய விபரங்களைச் உள்ளடக்கும் முறை தொடர்பான உதாரணமொன்று இத்துடன் உள்ள இணைப்பு 01 இன் அறிவுறுத்தல்களில் 04 ஆம் இலக்கத்தின் கீழ் தரப்பட்டுள்ளது.

06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்கச் செயற்படாமையின் காரணமாக எவரேனும் ஒரு உத்தியோகத்தரின் ஓய்வூதியத்தை உரிய திகதியில் செலுத்த முடியாத நிலை ஏற்படுமாயின், அந்த தாமதம் தொடர்பில் குறித்த நிறுவனத்தின் தலைவர் பொறுப்புக்கூற வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

**இணைப்பு 1**

**விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பண அறவீடுகள் தொடர்பான படிவத்தை (இணைப்பு 2) பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**

1. படிவத்தின் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியாக உமது நிறுவனத்தில் சம்பளம் செலுத்த ஆரம்பித்த திகதியிலிருந்து உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் திகதி (அதாவது உமது நிறுவனத்தில் சம்பளம் செலுத்துவது முடிவடையும் திகதி) வரையான காலப் பகுதி அமையும்.

2. மேலும், எவரேனும் ஒரு உத்தியோகத்தர் 05 வருடங்களுக்கு மேலாக அந்த அலுவலகத்திலேயே பணியாற்றியிருப்பின், அந்த 5 வருடங்கள் பூர்த்தியடையும் வருடத்தின் 31 ஆம் திகதியிலிருந்து அடுத்த அறிக்கையைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

   2.1 எவரேனும் ஒரு உத்தியோகத்தர் 5 வருடங்களுக்குக் குறைவான காலப் பகுதிக்குள் மற்றொரு அலுவலகத்திற்கு இடமாற்றம் பெறுவாராயின் அந்த நிறுவனத்தினுள் சேவையைப் பூர்த்தி செய்த மாதம் வரையிலான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

3. எவரேனும் ஒரு உத்தியோகத்தர் உமது நிறுவனத்தினால் சம்பளம் செலுத்த ஆரம்பித்த திகதியிலிருந்து சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதி வரையான காலம் 5 வருடங்களுக்கு அதிகமாக இருப்பின், அக்காலப் பகுதிக்கு என ஒரு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

4. படிவத்தின் 04 ஆம் இலக்க அட்டவணையில் காலப் பகுதிகளை வேறுபடுத்துவது தொடர்பான உதாரணமொன்று கீழே தரப்பட்டுள்ளது.

**அலுவலக உதவியாளர் சேவை - வகுப்பு III இல் பணியாற்றிய ஒருவருரின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையை கணக்கிட வேண்டிய முறைய கீழே காட்டப்பட்டுள்ளது.**

- சம்பள ஏற்றத் திகதி மே மாதம் 1 ஆம் திகதி ஆகும்.

| தொடர் இலக்கம் | காலப் பகுதி | | சம்பளம் செலுத்தலின் தன்மை | வருடாந்த திரட்டிய சம்பளம் | அறவிடப்பட்ட விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் பங்களிப்புத் தொகை | இரண்டாம் நிலைப்படுத்தலின் கீழ் சேவையாற்றிய காலத்திற்கு (25%) |
|---|---|---|---|---|---|---|
| | முதல் | வரை | | ரூபா. | ரூபா. | ரூபா. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| I. | 2000.05.01<br>2001.05.01<br>2002.05.01 | 2001.04.30<br>2002.04.30<br>2002.07.23 | சம்பளத்துடன் | 40,800.00<br>41,760.00<br>42,720.00 | 2448.00<br>2505.60<br>590.96 | |
| II | 2002.07.24 | 2002.12.31 | அரைச் சம்பளம் | 21,360.00 | 1124.96 | |
| III | 2003.01.01 | 2003.03.31 | சம்பளமற்ற | - | 640.80 | |
| IV | 2003.04.01<br>2003.05.01 | 2003.04.30<br>2003.06.30 | சம்பளத்துடன் | 42,720.00<br>43,650.00 | 213.60<br>436.50 | |
| V. | 2003.07.01<br>2004.01.01<br>2004.05.01 | 2004.03.31<br>2004.04.30<br>2004.06.30 | இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவித்தல் | 43,650.00<br>58,680.00<br>59,640.00 | 1309.50<br>1173.60<br>596.40 | |
| VI | 2001.01.01 | 2003.06.30 | மேலதிகமாகச் செலுத்திய சம்பளம் | 10,000.00 | 600.00 | |
| VII | 2004.07.01 | 2004.12.31 | சம்பளத்துடன் | 59,640.00 | 1789.20 | |
| VIII. | அறவிடப்பட்டுள்ள விதவைகள் அநாதைகள் மொத்தத் தொகை | | | | 12,229.12 | |
| IX. | பழைய சேவை நிலையங்களுக்குரிய அறவீடுகள் | | | | XXXX | |
| X. | இன்று வரை அறவிடப்பட்டுள்ள மொத்த விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை | | | | VIII + IX | |

கவனிக்க: - 3/2008 மற்றும் 2/2013 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பள லீவுகளுக்கும் விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையாக 6% கழிக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு 2**

எனது இலக்கம்:............
திகதி:...........

.........................
(திணைக்களத் தலைவர்)

<u>விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணம் அறவிடுதல் தொடர்பான விபரம்</u>

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவரின் தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

1. உத்தியோகத்தரின் பெயர் :-
2. பதவி :-
3. சம்பளம் செலுத்திய காலப் பகுதி :-
4. பங்களிப்புத் தொகை அறவிடப்பட்ட காலப் பகுதி:-
5. நிலுவை பங்களிப்புத் தொகைகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள்:-
6. அறவிடப்பட்ட விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை பற்றிய விபரம்

| தொடர் இலக்கம் | காலப் பகுதி | | சம்பளம் செலுத்தலின் தன்மை | வருடாந்த திரட்டிய சம்பளம் | அறவிடப்பட்ட விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் பங்களிப்புத் தொகை | இரண்டாம் நிலைப்படுத்தலின் கீழ் சேவையாற்றிய காலத்திற்கு (25%) |
|---|---|---|---|---|---|---|
| (I) | முதல் | வரை | | ரூபா. | ரூபா. | |
| (II) | | | | | | |
| (III) | | | | | | |
| (IV) | | | | | | |
| (V) | | | | | | |
| (VI) | | | | | | |
| (VII) | | | | | | |
| (VIII) | | | | | | |

7. மேற்குறித்த விபரங்கள் சரியானவை என்றும் தற்போது காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க விதவைகள்/ தபுதார்கள் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை சரியான முறையில் அறவிடப்பட்டு உரிய வருமானத் தலைப்பில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................
(கணக்காளர்)
(பதவி முத்திரை)

8. மேலே குறிப்பிட்டவாறு உத்தியோகத்தரின் விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை உரிய முறையில் அறவிடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..........................................
(திணைக்களத் தலைவர்)
(பதவி முத்திரை)

பிரதி:- உத்தியோகத்தர்